செ.வெ.எண் : 07/ மே நாள் : 07.05.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து

## அரசு முதன்மை செயலாளர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் ஆய்வு.

இராமநாதபுரம் நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் இன்று (07.05.2021) அரசு முதன்மை செயலாளர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 1287 நபர்களுக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 825 பேர் அவர்களது சொந்த வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 73,236 நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் அரசு மருத்துவ மருத்துவக் கல்லூரியில் 11 ஆயிரம் கொள்ளளவு கொண்ட திரவ ஆக்சிஜன் சேமிப்பு அமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு சராசரியாக 1800 லி முதல் 2200 லி அளவு திரவ ஆக்சிஜன் பயன்படுத்தப்படுகிறது. மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுவோருக்கு சிகிச்சைக்காக போதிய அளவு ஆக்கிஜன், படுக்கைகள், உயிர் காக்கும் மருந்துகள் தயார் நிலையில் உள்ளன.

இந்நிலையில், மாவட்டத்தில் இராமநாதபுரம் மற்றும் இராமேஸ்வரம் நகராட்சிகள், மண்டபம் மற்றும் இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுவோரின் எண்ணிக்கை அதிகளவில் உள்ளது. அதன்படி, இப்பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் அரசு முதன்மை செயலாளர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இராமநாதபுரம் நகராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார்கள்.

குறிப்பாக, இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட காட்டூரணி, ஆர்.காவனூர் ஆகிய கிராமங்களில் நடத்தப்பட்ட காய்ச்சல் பரிசோதனை முகாம்களை ஆய்வு செய்தார்கள். மேலும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் பொதுமக்கள் தவறாமல் தடுப்பூசி எடுத்துக் கொள்வதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியதோடு, சுகாதாரத்துறை அலுவலர்கள் மூலம் கொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடும் பணிகளையும் பார்வையிட்டார்கள். பொதுமக்கள் பொது இடங்களுக்கு செல்லும் போது கட்டாயம் முக கவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல், கைகளை அடிக்கடி சுத்தம் செய்தல் போன்ற நடைமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

தொடர்ந்து, இராமநாதபுரம் நகராட்சி, கூரிசாத்த அய்யனார் கோவில் தெரு, இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், சக்கரக்கோட்டை ஊராட்சி, நேரு நகர், காட்டூரணி ஆகிய இடங்களில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள பகுதிகளுக்கு அரசு முதன்மை செயலாளர்/மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆகியோர் நேரடியாகச் சென்று, சொந்த வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள்/உறவினர்களிடத்தில் கலந்துரையாடி அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்கள்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப்குமார்,இ.ஆ.ப., இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஒ.சுகபுத்ரா,இ.ஆ.ப., மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் திரு.தெய்வேந்திரன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**